

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 2025–26 ஆம் கல்வி ஆண்டு தொடக்க நாளான நேற்று முன்தினம் (02.06.2025) திங்கள் கிழமை அன்று சுமார் 700 பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா பாடப் புத்தகம், நோட்டு புத்தகம் 2 செட் சீருடைகள் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் மற்றும் சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் ஆகியோர் வழங்கினார்கள், இந்த நிகழ்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கார்த்திகா, சின்னசேலம் ஒன்றிய குழு துணை தலைவர், ஒன்றிய கழக செயலாளர் அன்புமணி மாறன், பேரூர் கழக செயலாளர் செந்தில்குமார், பேரூராட்சி மன்ற தலைவர் லாவண்யா ஜெய்கணேஷ் மற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சியில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு, பள்ளிக்கல்வித் துறை சார்பில் விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் விழா, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கார்த்திகா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சித் தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மாணவ,மாணவிகளுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகளை வழங்கி தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர், மேலும் இந்த நிகழ்வின் போது ஒன்றிய கழகச் செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாணவ,மாணவிகள் என அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.

### நார்வே செஸ் 2025 தொடரில் மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்தினார்!

# செஸ் வீரர் குகேஷ் சிறப்புமிகு பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூன் 4

நார்வே செஸ் 2025 தொடரில் மேக்னஸ் கார்ல்சனை வீழ்த்திய குகேஷ்க்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-



**நார்வே செஸ் 2025 தொடரில் மேக்னஸ் கார்ல்சனை கிளாசிக்கல் பிரிவில் வீழ்த்தியமைக்காக குகேஷ் அவர்களுக்குப் பாராட்டுகள்!**

**இந்திய செஸ்சுக்கு இது பெருமைமிகு தருணம், குகேஷ் அவர்களின் சிறப்புமிகு பயணத்தில் இது ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்!**

**உலக செஸ் அரங்கில் இந்தியாவின் உறுதியான வளர்ச்சியில் இது மற்றுமொரு திடமான படி!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞரால் கொண்டு வரப்பட்ட

# சேலம் உருக்காலை தொடர்ந்து லாபகரமாக நடந்து வருகிறது!

## உருக்காலையில் நடந்த கலைஞர் பிறந்த நாள் விழாவில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேட்டி!

சேலம், ஜூன் 4 -

சேலம் உருக்காலையை கொண்டு வந்த முன்னாள் முதல்வர் கலைஞருக்கு நன்றி செலுத்தும் விதமாக உருக்காலை தொழிலாளர்கள் சார்பில் நடந்த நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் பங்கேற்று கலைஞரின் புகைப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.....



அறிஞர் அண்ணாவின் கனவை நனவாக்கும் வகையில், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் 1970 இல் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி மூலம் உருக்காலையை கொண்டு வந்தார் என்றும் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக லாபகரமாக இயங்கும் பொது துறை நிறுவனம் வருவதற்கு காரணமானவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்று சுற்று லாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டார்.

முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் 102 வது பிறந்தநாள் விழா தமிழகத்தில் உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக சேலம் மத்திய மாவட்ட திமுக சார்பில் சேலம் மத்திய மாவட்ட செயலாளரும் சுற்றுலாத்துறை அமைச்சருமான ராஜேந்திரன் நேற்று சேலம் மாநகராட்சி அண்ணா பூங்காவில் அமைந்துள்ள 16 அடி உயர கலைஞர் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்னர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து சேலத்தின் அடையாளமாக திகழும் சேலம் ஒரு காளையை கொண்டு வந்த கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறும் விதமாக ஒரு காலை தொழிலாளர் முன்னேற்ற தங்கத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் கலந்து கொண்டு கலைஞரின் திருஉருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து நிகழ்ச்சியில் பங்கேற்ற அந்த பகுதி மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இனிப்புகளை வழங்கினார்.

இதனையடுத்து சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சேலம் உருக்காலை பேரறிஞர் அண்ணாவின் கனவு திட்டமாகும். இதே போன்று தூத்துக்குடி ஆழ் கடல் துறைமுகம் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று அறிஞர் அண்ணா எழுச்சி நாளை நடத்தினார்.

இதனைத் தொடர்ந்து கலைஞர், அறிஞர் அண்ணாவின் கனவு திட்டமான உருக்காலையை கொண்டு வர தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வந்தார்.

குறிப்பாக பிரதமர் இந்திராகாந்தியிடம் நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் சேலம் உருக்காலையை சேர்க்க வலியுறுத்தினார்.

அதன்படி முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி , நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் சேலம் உருக்காலை

அமைக்கப்படும் என வாக்குறுதி அளித்தார்.

அறிவித்தப்படி கடந்த 1970 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் தலைமையில் , அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி கலந்துகொண்டு அடிக்கல் நாட்டப்பட்டது.

இதனைதொடர்ந்து சேலம் உருக்காலை உருவானது.

50 ஆண்டுகளுக்கு மேலாக லாபகரமாக சேலம் உருக்காலை இயங்கி வருகிறது.

இதனிடையே 2006 11ஆம் ஆண்டு திமுக தலைமையிலான ஆட்சியில் முதலமைச்சர் கலைஞர் , சேலம் உருக்காலை விரிவாக்கம் செய்யப்பட வேண்டும் என்று அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வலியுறுத்தினார். அதன்படி 2000 கோடியில் விரிவாக்கம் செய்யப்பட்டது.

அப்போது முன்னாள் முதலமைச்சர் கலைஞர் தலைமையில் நடந்த உருக்கலை விரிவாக்க விழாவில் அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் அப்போதைய தலைவர் சோனியாகாந்தி ஆகியோர் பங்கேற்றனர். அப்போது துணை முதல்வராக இருந்த இப்போதைய முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் விரிவாக்கத்திற்கான பணிகளை மேற்கொண்டார்.

சேலம் உருக்காலை உருவாகவும், சிறப்பாக செயல்படவும் காரணமாக இருந்த கலைஞருக்கு நன்றி செலுத்தும் வகையில் உருக்காலை தொழிலாளர்களும், இரும்பாலை சேர்ந்த பகுதி மக்களும் ஏற்பாடு செய்த கலைஞர் பிறந்தநாள் விழாவில் பங்கேற்பதில் பெருமை கொள்கிறேன்.

# தமிழ்நாட்டில் அரசுப் பேருந்து கட்டணம் உயர்த்தப்படாது!

## போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மீண்டும் உறுதி!

அரியலூர், ஜூன் 4-

தமிழ்நாட்டில் அரசுப் பேருந்து கட்டணம் உயர்த்தப்படாது என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் உறுதிபட தெரிவித்துள்ளார். அரசுப் பேருந்து கட்டணம் உயர்த்தப்படுவதாக வெளியாகும் செய்திகள் தவறானது என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

அரியலூரில் செய்தியாளர்களிடம் பேசிய போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர், குறிப்பிட்ட சில ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் தமிழ்நாட்டில் பேருந்து கட்டணம் உயர்த்தப்படவுள்ளதாக ஒரு தவறான செய்தி பரப்பப்பட்டு வருவதாக தெரிவித்தார்.



ஏற்கனவே சில முறை இதுபோன்று பேருந்து கட்டணம் உயர்வு என்ற தகவல் வந்தபோது கூட ஒரு காலத்திலும் பேருந்து கட்டணம் உயர்த்தப்படவில்லை. தமிழ்நாட்டில் போக்குவரத்து துறைகள் இழப்பில் இருந்தாலும், பொருளாதார சிக்கலில் இருந்தாலும், ஒன்றிய அரசு டீசல் விலையை பலமுறை கூட்டி இருந்தாலும் ஒரு போதும் பேருந்து கட்டணம் உயர்த்தப்பட்டதில்லை என்று அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார். எனவே தமிழ்நாட்டில் இப்போதும் பேருந்து கட்டணமும், மின்சார கட்டணமும் உயர்த்தப்படாது என்று அவர் உறுதிபட தெரிவித்தார்.

# புதுக்கோட்டையில் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் - சீருடைகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்!

புதுக்கோட்டை, ஜூன் - 4 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் (02.06.2025) அன்று சென்னை, திருவல்லிக்கேணி, லேடி வில்லிங்டன் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2025-26 ஆம் கல்வியாண்டிற்கான புதிய பாடநூல்கள், சீருடைகள், நோட்டு புத்தகங்கள் மற்றும் பிற கல்வி உபகரணப் பொருட்களை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி, இந் நிகழ்வினை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், புதுக் கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் , புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு. வை.முத்துராஜா, புதுக் கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட கல்வி அலுவலர்கள் ரமேஷ் (புதுக்கோட்டை), செந்தில், ஜெயந்தி, கலாராணி (அறந்தாங்கி), லீலாவதி (தனியார் பள்ளிகள்), மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் க.ஸ்ரீதர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் க.ந.கோகுலப்பிரியா, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பெரியண்ணன் அரசு, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் த.சந்திரசேகரன், புதுக் கோட்டை வட்டாட்சியர் மு.செந்தில்நாயகி, இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் ஜெ.தமிழரசி, மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர். சாலை செந்தில், பள்ளித் துணை ஆய்வாளர்கள் வேலுச்சாமி, குருமாரிமுத்து மற்றும் எம்.எம். பாலு, நைனாமுகமது, சண்முகநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




திமுக. இளைஞர் அணி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

திருச்சி தெற்கு, திருச்சி வடக்கு மற்றும் திருச்சி மத்திய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 04.06.2025 புதன்கிழமை | காலை 9.30 மணி | திருச்சி வடக்கு | ஸ்ரீ தனலட்சுமி மணி மஹால், உளுந்தங்குடி பைபாஸ் சாலை பாலம் அருகில், மண்ணச்சநல்லூர், திருச்சி. |
| | மாலை 4.00 மணி | திருச்சி மத்திய | கலைஞர் அறிவாலயம், கரூர் பைபாஸ் சாலை, திருச்சி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 02-06-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளில் விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இருந்து கலைஞர் அறிவாலயத்திற்கு செம்மொழி நாள் பேரணியாக சென்று பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகளுக்கு, விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, இனிப்பு வழங்கினார். இரத்ததான முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், எலவனாசூர்கோட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 2025–26 ஆம் கல்வி ஆண்டு தொடக்க நாளான நேற்று முன்தினம் (02.06.2025) திங்கள் கிழமை அன்று பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா பாட புத்தகம், நோட்டுப் புத்தகம், 2 செட் சீருடைகள் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்ட கழக அவைத்தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் வழங்கி சிறப்புரையாற்றினார், இந்த நிகழ்வில் ஊராட்சி மன்றத் தலைவர் ஜே.நந்தகுமார், துணைத் தலைவர் எல்.சம்ஷாத், ஒன்றிய கவுன்சிலர்கள் பர்வீன் சர்தார், ராதா மனோகர் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.